# நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசிக்கும் போது, அது உங்களுடையதாகி விடுகிறது



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

1

20. அது உங்களால் - உங்களால் சுகமாக முடியாது என்பதற்கு அர்த்தமல்ல. **இயேசு கிறிஸ்து உங்களைச் சுகப்படுத்துகிறார் என்று விசுவாசிக்கிற நீங்கள் எங்கேயிருந்தாலும் சுகமடைய முடியும் (பாருங்கள்?), நீங்கள் எங்கேயிருந்தாலும். நீங்கள் எப்போதுமே அதை நினைவில் கொள்வீர்களா? அதை எப்போதும் நினைவில் வையுங்கள், சுகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்...**

**கிறிஸ்துவினால் உங்களுக்காக செய்ய முடிந்தது எல்லாமே ஏற்கனவே செய்யப்பட்டாயிற்று.** ஆமென். புரிகிறதா? **கிறிஸ்துவும் தேவனும் உங்களுக்காக செய்யக்கூடிய எல்லாம் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது.** இப்பொழுது, அடுத்த காரியமாக உங்களுக்குள்

வைக்கப்பட்டுள்ளது. **நீங்கள் பாவியாக இருந்தால், இயேசு ஏற்கனவே உங்களை இரட்சித்திருக்கிறார், ஆனால் நீங்கள் - உலகத்தின் பாவத்தைப் போக்கும்படியாக அவர் மரித்த போது, (அது செய்யப்பட்டது), ஆனால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் வீட்டிற்குப் போவதற்கான வழி பயணக் கட்டணத்தை நான் செலுத்தி விட்டேன்" என்று கூறலாம்.

**நல்லது, நான் அதை ஏற்றுக்கொண்டாலொழிய அது எனக்கு எந்த நன்மையும் செய்யாது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் மட்டுமாக கிறிஸ்துவினுடைய மரணம் உங்களுக்கு உதவி செய்யாது.** இப்பொழுது, "**அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்.**" **அவர் உங்களுக்காக பரிகாரத்தைச் செய்த போதே அவர் உங்களைக் குணமாக்கி விட்டார். ஆனால் இப்பொழுது, நீங்கள் அதை**

**ஏற்றுக்கொள்ளும் மட்டுமாக அது உங்களுக்கு ஒருபோதும் எந்த நன்மையும் செய்யாது. நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசிக்கும் போது, அது உங்களுடையதாகி விடுகிறது.** இப்பொழுது, பாருங்கள், **அது உங்களைப் பொறுத்தது.** இப்பொழுது, அவர் செய்கிற இந்தக் காரியங்கள், அந்தக் காரியங்களை நிரூபிக்கும்படியாக அவர் அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்புகிறார், அது-அது செய்யப்பட முடியும்.

*செய்தி:* **இரண்டாம் அற்புதம்**, ஜூலை 22, 1951, டுலிடோ, ஒஹியோ, அமெரிக்கா